செய்தி வெளியீடு எண்: 115 நாள்: 19.02.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு இரா. காமராஜ் அவர்கள் தலைமையில், மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்கள் மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்களுடனான மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் இன்று (19.02.2018) சென்னை, சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் நடைபெற்றது.

**மாண்புமிகு அம்மா** அவர்களால் தமிழகத்தில் முதன்முறையாக 1.6.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கும் உன்னதமான திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மத்திய அரசும், பிற மாநில அரசுகளும், இந்திய திருநாட்டின் உச்சநீதிமன்றமும் பாராட்டுகின்ற வகையில் இத்திட்டம் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 1 கோடியே 93 இலட்சத்து 58 ஆயிரத்து 47 குடும்ப அட்டைகளில் 1 கோடியே 83 இலட்சத்து 6 ஆயிரத்து 49 அரிசி விருப்ப குடும்ப அட்டைகளுக்கு இத்திட்டத்தின்கீழ், மாதந்தோறும் 3 இலட்சத்து 25 ஆயிரத்து 655 மெ.டன் தரமான புழுங்கல் மற்றும் பச்சரிசி விலையில்லாமல் 34 ஆயிரத்து 877 நியாய விலை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுதவிர, சர்க்கரை, கோதுமை முதலான பொருட்கள் மானிய விலையிலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பருப்பு கிலோ ரூ.30 என்ற விலையிலும், பாமாயில் லிட்டர் ரூ.25 என்ற குறைந்த விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னத திட்டமான ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டம் 330 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு,

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புகைப்படம், குடும்ப தலைவர் விவரம் மற்றும் பிறந்த தேதி போன்ற விவரங்கள் பெறப்படாத குடும்ப அட்டைதாரர்கள் முழுவிவரம் அளித்தபின் அவர்களுக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் முழுமையாக வழங்கப்படும்.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாதந்தோறும் 2ஆம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் நுகர்வோர் குறைதீர் முகாம்களில், பெறப்படும் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அன்றைய தினமே தீர்வு காணப்படும் நடைமுறை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட நாள் முதல் 10.2.2018 வரை, இத்திட்டத்தில் 6 இலட்சத்து 93 ஆயிரத்து 122 மனுக்கள் பெறப்பட்டு, 6 இலட்சத்து 71 ஆயிரத்து 294 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் மீதும் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வரும் கடத்தல் தடுப்பு முறைகளை பிற மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டுமென மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் இன்று வரை, 38 ஆயிரத்து 791 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 1,037 நபர்கள் தடுப்பு காவல் தடைச்சட்டத்தின் கீழ் (BM ACT) சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் திறக்கப்பட்டுள்ள 1,152 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (மற்றும் தேசிய நுகர்வோர் கூட்டுறவு சம்மேளனம்) மூலம் இதுவரை, 1 இலட்சத்து 50 ஆயிரத்து 885 மெ.டன் நெல்

கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,660 என்ற விலையிலும், சாதா ரக நெல் ரூபாய் 1,600 என்ற விலையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுவரை, விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக மட்டும் 9 கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி, தேவைப்படும் இடங்களில் எல்லாம் கொள்முதல் நிலையம் திறக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொள்முதல் பணிகள் முடுக்கி விடப்படவேண்டும் என்றும், எவ்வித புகார்களுக்கும் இடமின்றி நெல் கொள்முதல் செய்யப்படுவதை உறுதி செய்து வரவேண்டுமென்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்களை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்ட தேவைக்கு போதுமான புழுங்கல் மற்றும் பச்சரிசி கையிருப்பில் உள்ளதாகவும், சர்க்கரை, கோதுமை, பருப்பு, பாமாயில் ஆகிய மானிய விலை பொருட்கள், ஒவ்வொரு மாதமும் தேவைக்கேற்ப அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படுகிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் மண்டல மேலாளர்கள் நியாய விலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் சீரான முறையில் நடைபெறுவதை, உறுதி செய்து வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப.,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி. எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி. எஸ்.மதுமதி, இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப் புலனாய்வுத்துறை சென்னை சரக கண்காணிப்பாளர் திருமதி. சோனல்சந்த்ரா, இ.கா.ப., மதுரை சரக கண்காணிப்பாளர் திரு. ரூபேஷ்குமார் மீனா, இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**